மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆ... 27 JUL 2016 ★கே.கே.நகர்,சென்னை–600078★

**சுருக்கம்**

மாற்றுத் திறனாளிகள் நலத் துறை– மாற்றுத் திறனாளிகளுக்கு சுயவேலைவாய்ப்பு உருவாக்கும் மத்திய அரசின் பாரதப் பிரதமரின் சுயவேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டம் (PMEGP)– 2016–2017 ஆம் நிதியாண்டிற்கான திட்டத் தொடராணை–ஆணை– வெளியிடப்படுகிறது.

---

மாற்றுத் திறனாளிகள் நல(மா.தி.ந.2.1)த் துறை

அரசாணை(1D) எண்.48

நாள்: 21–07–2016
துன்முகி, ஆடி 6,
திருவள்ளுவர் ஆண்டு 2047

படிக்க:–

1. அரசாணை(1D) எண்.43 மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, நாள் 13–11–2015.
2. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் , ந.க.எண்.2653/மா.தி.ந.3.1/2016, நாள் 16.06.2016.

--------

**ஆணை:**

மேலே ஒன்றாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், மாற்றுத் திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பினை உருவாக்கும், பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்திற்கு, 2015–2016 ஆம் நிதியாண்டில் திட்டத் தொடராணையும், மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5% முதலீட்டாளர்கள் பங்கு தொகையை தமிழக அரசே ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கு மானியமாக வழங்கிட, தோராயமாக 50 பயனாளிகள் பயனடையும் வகையில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்து அரசாணை வெளியிடப்பட்டுள்ளது.

2. மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், 2016–17 ஆம் நிதியாண்டிற்கு, இத்திட்டத்தை செயல்படுத்த திட்டத் தொடராணையும், மேலும் மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5% முதலீட்டாளர்கள் பங்கு தொகையினை, தமிழக அரசே ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கு மானியமாக வழங்கிட, தோராயமாக 50 மாற்றுத் திறனாளிகள் பயன் அடையும் வகையில் ரூ.5.00 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யுமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையரின் கருத்துருவை அரசு ஏற்று, மாற்றுத் திறனாளிகளுக்கு சுய வேலைவாய்ப்பினை உருவாக்கும் பாரத பிரதமரின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்திற்கு 2016–2017 ஆம் நிதியாண்டில் திட்டத் தொடராணையும், மாற்றுத் திறனாளிகள் செலுத்த வேண்டிய 5% முதலீட்டாளர்கள் பங்குத் தொகையை தமிழக அரசே ஏற்று, மாற்றுத் திறனாளிக்ளுக்கு மானியமாக வழங்கிட, நிர்வாக ஒப்பளிப்பும் தோராயமாக 50 மாற்றுத்

திறனாளிகள் பயனடையும் வகையில் ரூ.5.00 இலட்சம் (ரூபாய் ஐந்து இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்தும் வழங்கி அரசு ஆணையிடுகிறது.

4. மேலே பத்தி 3–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினம் பின்வரும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்பட வேண்டும்:–

" 2235– சமூக பாதுகாப்பும் நலனும்–02. சமூக நலன் –101– மாற்றுத் திறனாளிகள் நலன்– I– திட்டத்தில் சேராதது –CN பிரதம மந்திரியின் வேலைவாய்ப்பு உருவாக்கும் திட்டத்தின் கீழ் மாற்றுத் திறனாளிகள் சுயவேலை வாய்ப்புப் பெற உதவித் தொகை –09. உதவித் தொகை–03. குறிப்பிட்ட திட்டங்களுக்கான உதவித் தொகை".
(த.தொ. கு. 2235–02–101–CN–0938)

5. மேற்கொண்ட தொகையை பெற்று வழங்க மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையருக்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

6. இவ்வாணை நிதித் துறையின் அ.சா.எண்.37274/நிதி(சந)/2016, நாள் 14.07.2016 ன் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**முகமது நசிமுத்தின்,**
**அரசு முதன்மைச் செயலாளர்.**

பெறுநர்
மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர், சென்னை–78.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்(மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
அனைத்து மாவட்ட மாற்றுத் திறனாளிகள் நல அலுவலர்கள் (மாற்றுத் திறனாளிகளுக்கான மாநில ஆணையர் வழியாக)
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை–18.
முதன்மை மாநில கணக்காயர், சென்னை– 18. (பெயரில்)

<u>நகல்:–</u>
நிதி (சந) துறை, சென்னை–9.
முதன்மைச் செயலாளர் அவர்களின் தனிச் செயலாளர், மாற்றுத் திறனாளிகள் நலத் துறை, சென்னை–9.
மாண்புமிகு சமூக நலம் மற்றும் சத்துணவு திட்டத் துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை–9.
இருப்பு கோப்பு/உதிரி.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

21/7/16
பிரிவு அலுவலர்.

21/7/16